# கவிதா ஜவஹரின் "யாதுமாகி நின்றாய் தோழி"

***மா. சரவணக்குமாரி***
பதிவு எண்: 22122014022010, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது, அபிஷேகப்பட்டி

***முனைவர் கு. நீதா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை ளூதமிழாய்வு மையம்,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி , தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15526567

***ஆய்வுச்சுருக்கம்***

*"தெய்வம் கருவறைக்குள்.*
*அந்தக் கருவறையே*
*அம்மா என்னும்*
*தெய்வத்திற்குள்."* *கவிஞர் நெல்லை ஜெயந்தா*

*கருவறைக்குள் இருக்கும் தெய்வத்தை விட நம்மை கருவில் சுமந்த தெய்வம் ஒரு படி மேலானதுஎன்பதற்கிணங்க தாயையும், தாய்மையையும், தமக்கை, தங்கை போன்ற உறவு முறைகளையும் அந்த இடத்திலேயே தன்னை பாவித்துப் பேசுகின்ற பேச்சாளர் திருமதி கவிதா ஜவஹரின் 'யாதுமாகி நின்றாய் தோழிசுஎன்ற தொடர் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது. இவர் சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர். கவிஞர், எழுத்தாளர், ஆன்மிக சொற்பொழிவாளர், பல வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து தன் சொல்லாற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். தனித்துவம் வாய்ந்த குடும்பம், சமூகம், இலக்கியம், அறிவியல், பண்பாடு, சினிமா போன்ற எல்லாத் தலைப்புகளிலும் பேசுகிறார்.*

*"அன்புள்ள இதயமெல்லாம் அன்னைக்கும் சமம்*
*அன்னையின் இதயமே இறைவனுக்குச் சமம்"*

*உலகம் அனைத்தையும் ஒரு தராசுத் தட்டிலும் நம் தாயை மறு தட்டிலும் வைத்தால் உலகை வைத்த தராசுத்தட்டு தான் மேலே நிற்கும். தாயை வைத்த தராசுத்தட்டிற்கு இணை எதுவும் இல்லை என்று பெண்மையை தோழியாக ஏற்று எழுதியுள்ளார்.*

**முன்னுரை**

***"அம்மா ஆடை கட்டிய அறம்***
***அவள் தான் அசல்***
***ஆலயத்தில் உள்ளது நகல்"*** ***கவிஞர் வாலி***

அவர் எழுதிய திரைப்படப்பாடலில்

***"பசுந்தங்கம் புது வெள்ளி மாணிக்கம் மணிவைரம்***
***அவையாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா***
***விலை மீது விலை வைத்து கேட்டாலும் கொடுத்தாலும்***

*கடைதன்னில் தாயன்பு கிடைக்காதம்மாசு என்ற திரைப்படப்பாடல் திருச்சியில் உள்ள ஐயப்பன் கோயிலில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. தாயில்லாத பிள்ளை கையிழந்த மனிதனுக்குச் சமம்.*

கவிதா ஜவஹர் இராஜபாளையம் அருகே உள்ள சேத்தூரில் 'திருமணம் என்பது புந்தோட்டமா..? போராட்டமா..? என்ற பட்டிமன்ற நிகழ்வில் புந்தோட்டமே..! என்ற தலைப்பில் பேசிய இவரைப் பெண் பார்க்க வந்தவர்கள் அனைவரும் முன் வரிசையில் அமர்ந்து பார்த்தனர். இதுவே இவருடைய வாழ்க்கை புந்தோட்டமாக அமைவதற்கும், கணவர் கிடைப்பதற்கும் காரணமாகவே அமைந்தது.

**"பிறப்பு என்பது ஒரு புள்ளி**
**இறப்பு என்பது ஒரு புள்ளி"**

இரண்டையும் இணைப்பதுதான் வாழ்க்கை என்ற கோலம். பெண்களுக்கு மரியாதை, பேர், புகழ் தரும் துறை என்பதால் திறமையுள்ள பெண்கள் நிறைய வரவேண்டும் என்ற கருத்தை முன் வைக்கும் கவிதா ஜவஹரின் பெண்மை பற்றியப் பேச்சைக் கூறுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## அற்புதமான அக்கா

இந்தியர்கள் அனைவரையும் இணைப்பது தேசியக்கொடி.

தாயையும் பிள்ளைகளையும், இணைப்பது தொப்புள்கொடி.

கணவனையும் மனைவியையும் இணைப்பது தாலிக்கொடி.

என்றார்கள். கேரளாவில்உள்ள இடுக்கியில் பீர்மேடு என்ற நகரில் வசிப்பவர் கிருஷ்ணபிரசாத். அவரது அக்காகிருஷ்ணப்பிரியா ஒரு தனியார் நிறுவனத்தில் முக்கிய பொறுப்பில் இருக்கிறார். ஒவ்வொரு வருடமும் சர்வதேச சகோதரர் தினத்திற்கு (மே-24) தன் தம்பிக்கு வாழ்த்துச் சொல்லி பரிசளிப்பது அக்காவின் வழக்கமான செயலாக இருந்தது. இந்த வருடம் (2022 - மே-24) அன்று வேலைப்பளுவின் காரணமாக தன் தம்பிக்கு வாழத்துச் சொல்ல மறந்துவிட்டார். மிக முக்கியமான கூட்டத்தில் இருந்ததால் தன் அலை பேசியை அமைதிப்படுத்திவைத்துவிட்டார். அக்காவிடம் இருந்து வழக்கமாக வரும் அழைப்பு வரவில்லை என்பதால் தன் அக்காவிற்கு அழைப்பு கொடுக்கிறார். பணி நிமித்தமாக அக்காவால் பேச முடியவில்லை. இதனால் அக்காவின் மேல் கோபமடைந்த தம்பி அவளுடைய அலைபேசி நம்பரை நிறுத்தம் செய்து விட்டார். அலுவலகப் பணி முடிந்த பின்பு அலைபேசியைப் பார்த்த போது தான் நினைவிற்கு வருகிறது. தன் தம்பிக்கு வாழ்த்துச் சொல்லலாம் என்று நினைத்து அழைத்தபோது தான் தெரிகிறது தன் நம்பரை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்று.. அறிந்த பின் அன்று இரவே தன் தம்பிக்கு கடிதம் எழுதினார். அவன் பிறந்தது முதல் இன்று வரை அவன் மீது வைத்துள்ள பாசத்தையும், அன்பான நினைவுகளையும் மிக உறுக்கமாக எழுதினாள். அந்தக் கடிதம் எழுதி முடிக்க 12 மணி நேரம் ஆனது. கடிதம் 434 மீ நீளமும் 5 கிலோ எடையும் கொண்டதாக இருந்தது. அதை தன் தம்பிக்கு விரைவுத் தபாலில் அனுப்பி வைத்தார். அதைப் படித்துப் பார்த்த தம்பி கலங்கிய கண்களுடன் தன் அக்காவைப் பார்க்க ஓடி வந்தார். இன்று அந்தக் கடிதம் உலக கின்னஸ் சாதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அக்கா- தம்பி அன்பை எழுதத் தொடங்கினாள்சு தாளும் தாள் தொழும், பேனாவும் கண்ணீர் வடிக்கும். அக்காகளின் அன்பை அளப்பதற்கு எந்த ஒரு அளவுகோலும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

## தமக்கை என்னும் தாய்

**"கொலு வைக்கும் வீடுகளில்**
**ஒரு குத்து சுண்டல் அதிகம் கிடைக்கும்"**

**கவிஞர் கலாப்பிரியா**

என்று தங்கச்சி பாப்பாக்களை தூக்க முடியாமல் தூக்கி வரும் அக்கா குழந்தைகள்.

பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழலில் பிறந்த தம்பிக்கோ தங்கைக்கோ காவலாக அமர்த்தப்படும் அக்கா முதலில் தன் கல்வியை இழக்கிறாள். சக பிள்ளைகளோடு விளையாடும் சுதந்திரத்தை இழக்கிறாள்.

நானும் ஒரு குழந்தைதான் என்ற குழந்தை தன்மையை இழக்கிறாள். இத்தனையும் இழந்து தம்பி தங்கைகளுக்காக இன்னொரு தாயாகத் தன்னை உருமாற்றிக் கொள்கிறாள். போன தலைமுறை குடும்பங்களில் பத்து பன்னிரெண்டு பிள்ளைகள் சர்வ சாதாரணமாக பிறந்திருப்பார்கள். பிரசவத்தில் உடல் நலம் குன்றிப் போனதாயையும் சேர்த்துக் கவனித்து கொள்ளவும், தம்பி தங்கைகளை ஆளாக்கி வளர்க்கிற அக்காக்களின் அக்கறையால்தான் அன்றைய குடும்பங்கள் தலை நிமிர்ந்து நின்றன. கூட்டுக் குடும்பங்களில் எண்ணற்ற உறவுகள் நிறைந்திருந்த சூழலில் அத்துணை பேருக்கும் சமைத்து, பணிவிடை செய்து தன் கடமையை ஆற்றும் அக்காக்கள் இளம் வயதிலேயே வயோதிகத் தோற்றத்தை அடைந்தும் விடுகிறார்கள்.

தம் இளமையை அடகு வைத்து குடும்ப உறவுகளை மீட்டுத் தந்த அக்காக்கள் நம் தமிழ்க் குடும்பங்களில் ஆகப்பெரிய பலமாக இருந்திருக்கிறார்கள். மார்கழி மாதங்களில் கிணற்றடியில் தன் தம்பி, தங்கைகளை வரிசையாக அமர வைத்து தன் கைநோக தண்ணீர் இறைத்து அத்தனை பேரையும் தேய்த்து குளிக்க வைத்து கோயில் பஜனைக்கு அனுப்பி வைக்கும் அக்காக்களால் தான் பக்தி பரவியது.

மணிப்புரை சேர்ந்த பத்து வயதான "மெயனிங் சின்வியு பேமே" என்ற பத்து வயது சிறுமி தன் பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்வதால் சிறு குழந்தையான தன் தங்கையையும் பள்ளிக்கு அழைத்து வந்து தன் மடியில் அமர வைத்து பாடம் கவனிக்கும் அந்த குழந்தையின் புகைப்படம் வைரலான ஒன்று. அக்கா என்பவள் என்றுமே இன்னொரு அம்மா தான்.

**"அக்காவுடையான் எதற்கும் அஞ்சான்"**
**"தம்பியுடையான் படைக்கஞ்சான்"**

என்பது பழமொழி.

**"அக்காவுடையான் எதற்கும் அஞ்சான்"**

என்பது அனுபவ மொழி.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் மகாத்மா காந்தி அவர்கள் இந்தியா முழுவதும் விடுதலை உணர்வைத் தூண்டி அகிம்சை முறையில் போராடுவதற்கான வழி முறைகளை மக்களிடம் உருவாக்கிக் கொண்டிருந்தார். அப்போது மக்கள் மத்தியில் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது அவரது பேச்சைக் கேட்பதற்கு பெரும் திரளாக மக்கள் கூட்டம் வந்திருந்தது. அந்தக் கூட்டத்தில் ஒரு ஓரத்தில் எட்டு வயது சிறுமி தன் இடுப்பில் ஆறு மாதக் குழந்தையை ஏந்திக் கொண்டு காந்தியடிகளின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஏறத்தாழ இரண்டு மணி நேரத்திற்கு மேலாக பேசிவிட்டு இறங்கும் போது அந்தச் சிறுமி தன் தம்பியை இடுப்பில் வைத்தப்படி அப்போதும் அப்படியே நின்று கொண்டிருந்தாள். இதைப் பார்த்த காந்தியடிகள் கேட்டார். இந்தக் குழந்தை உனக்கு சுமையாகத் தெரியவில்லையா என்று கேட்டார். அதற்கு அந்த எட்டு வயது சிறுமி பாபுஜி இது என் தம்பி. எனக்கு மிகவும் பிடித்தவன் என்று பதில் அளித்தாள் சிறுமி.

தனக்கு பின் பிறந்த தம்பி, தங்கைகளை சுமையாக அல்லாமல் சுகமாகத் தூக்கிச் சுமக்கும் அக்காவின் இடுப்பு சின்ன வயதில் நமக்கு கிடைத்த ஒரு சிம்மாசனம். தெருவில் உள்ளவர்கள் யாரேனும் தம் தம்பி தங்கையை வம்பிழுத்தால் வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வரும் வீராங்கனைகள். தனக்கு என்று அப்பா வாங்கி வரும் தின்பண்டங்களை தம்பி, தங்கைகளுக்கு தாரை வார்க்கும் தனிப்பிரிவு. தம்பி என்ற உறவு தாய்மாமனாக மாறும் போது அவனிடத்தில் தன் தந்தையை தரிசிப்பவள் அவள்.

### அக்கா என்றொரு அழகி

"அக்காவின் சமையலில் அப்படியே இருக்கிறது அம்மாவின் கை மணம்"

கவிதா ஜவஹர்

அம்மாவிற்கு பிறகு அம்மாவின் அம்சமாய், அம்மாவின் வடிவமாய், அம்மாவின் நகலாய்

நமக்குள் நிறைந்திருப்பவள் நம் அக்கா மட்டும் தான்.

அக்காவின் சின்னப்புன்னகை, கூந்தலை ஒதுக்கி விடும் தோரணை, புடவை கட்டும் நேர்த்தி, விருந்தினரை உபசரிக்கும் பரிவு, தன் துன்பங்களுக்கான நேரங்களில் கண்ணீர் விடும் தருணங்களில் அக்கா என்பவள் நம் அம்மாவின் இன்னொரு பிரதிநிதியாகவே மாறிவிடுகிறாள்.

**சுந்தரச் சோழனின்மகளான குந்தவை,**
**ஆதித்த கரிகாலனின் தங்கை,**
**இராஜஇராஜ சோழனின் அக்கா,**
**வந்தியத்தேவனின் காதல் மனைவி**

இவற்றை எல்லாம் தாண்டி சோழ தேசத்தின் மேல் மாறாக் காதல் கொண்டவள். வேற்று நாடு அரசரை திருமணம் செய்தால் தன் நாட்டை விட்டு செல்ல வேண்டும் என்று குறுநில மன்னனாகிய வந்தியத் தேவனை காதல் மனம் புரிந்தாள்.

இன்று வானளாவ உயர்ந்து நிற்கும் தஞ்சை பெருவுடையார் கோவில் எழுவதற்கு அக்கா குந்தவை நாச்சியாரும் ஒரு முக்கிய காரணமாகும். கோயில் கட்டுவதற்காக பத்தாயிரம் கழஞ்சுஎடையுள்ளதங்கத்தையும் பதினெட்டாயிரம் கழஞ்சு மதிப்புள்ள வெளசுளியையும்தானமாக கொடுத்தார். தன் தமக்கையின் மேல் உள்ள அன்பால் கோயில் கல்வெட்டில் பதிவும் செய்துள்ளார்.

**“நாம் கொடுத்தனவும் நம் அக்கன்**
**கொடுத்தனவும் நம் பெண்டுகள்**
**கொடுத்தனவும் கொடுப்பார்**
**கொடுத்தனவும், இந்தக் கல்லிலே**
**திருவாய்மொழிஞ்சருளி”**

தன் அக்காவின் மேல் உள்ள தீராத அன்பினால் தன் மகளுக்கும் குந்தவை என்று பெயரிட்டார். என் வாழ்வின் அடையாளமே என் அக்கா தான் என்று இராஜராஜ சோழன் குறிப்பிட்டுள்ளார்.

அரச குடும்பங்களில் மட்டும் அல்ல, ஏழைக்குடும்பங்களிலும் தன்னை ஒரு மெழுகுவர்த்தியாக மாற்றிக்கொண்டு குடும்பத்தை ஒளிறச்செய்கிறவள்தான்அக்கா தன் தம்பி தங்கைகளின் வாழ்க்கைக்காக திருமணமே செய்யாமல் தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பவள் தான் அக்கா.

தாய்க்குப் பின் தாகம் தீர்க்கும் அன்பு நதி தான் நம் அக்கா. தம்பிகள் செய்யும் தவறுக்கெல்லாம் தண்டனை அனுபவிக்கும் கருணையின் நிழல் தான் அக்கா. தன் தம்பியோ, தங்கையோ படிப்பதற்காக தன் கல்வியை துறந்து எத்தனையோ அக்காக்களின்தியாகத்தில்தான்நம்பேருக்குப் பின்னால் பட்டங்கள் மின்னுகின்றன. தன் தங்கையின் திருமணத்திற்காக தன் நகைகளை கழற்றிக் கொடுத்துவிட்டு புகுந்த வீட்டின் கொடுமைகளை ஏற்றுக்கொண்டு அருள்பாலிக்கும் கடவுளாக காட்சிக் கொடுப்பவள் தான் தன் அக்கா. நமக்கு துன்பம் வருபோதெல்லாம் தன்னோடு அரவணைத்துக் கொண்டு ஆறுதல் தரும் சிறிய தாய் தான் அக்கா என்பவள். நமக்கு என்று எத்தனையோ வகுப்பறைத் தோழிகள் இருக்கலாம். ஆனால் நம் அக்கா தான் நம் கருவறைத் தோழி ஆவாள். தன் தம்பி, தங்கைகளை தன் பிள்ளைகளாக நேசிக்கும் அக்காக்கள் இருப்பதால் தான் இவ்வுலகத்தில் நதிகள் இன்றும் வற்றாமல் இருக்கின்றன.

## தாயின் பெருமை

“அன்பு” என்னும் தலைப்பில் சிறிய கவிதை கேட்டவுடன் சொன்னேன்

“அம்மா” என்று கேட்டது அம்மாவாக இருந்தால் இன்னும் சிறியதாக சொல்லி இருப்பேன் “நீ” என்று..!

ஒரு பெண் தாய் என்னும் ஸ்தானத்தை அடையும் போது தெய்வத்தின் அம்சத்தைப் பெறுகிறாள். உலகத்தைப் படைத்தவன் இறைவனாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு குழந்தைக்கும் கண்கண்ட முதல் தெய்வம் அந்தக் குழந்தையை இந்த உலகிற்கு தந்த தாய் தான் ஆவாள். யஜூர் வேதம் சொல்கிறது “மாத்ரு தேவோ பவ” தாய் தெய்வத்திற்கு ஒப்பானவள் என்று

கூறுகிறது. ''தாயிற் சிறந்த கோயிலுமில்லை'' என்றார் ஔவையார். மகாபாரத்தில் ''சாந்தி பருவத்தில் சுபீஷ்மர் கூறும் அறிவுரையில் ''ஒருவன் திருமணமாகி பல குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும் முதுமைப் பருவம் வந்தாலும் அவன் தாய்க்கு அவன் எப்போதுமே குழந்தைதான்''.

வால்மீகி இராமாயணத்தில் ஸ்ரீராமர் கூறுவார் ''தாயும் தாய்நாடும் சொர்க்கங்களை விட மேலானது''.

வால்மீகி இராமாயணம் அரும்பெரும் தத்துவங்களையும் உபநிடத தத்துவங்களையும், அவற்றின் சாரங்களையும் உலகிற்குத் தந்த ஆதிசங்கரர் தாயின் அந்திம காலத்தில் மடியில் கிடத்திப் பாடிய பாடல் தான் ''மாத்ரு பஞ்சகம்''

**''ஆஸ்தாம் தாவதியம் ப்ரஸூதி ஸமயே துர்வார சூலவ்யதா''!**

பாடல் - 1

அம்மா நீ என்னை கருவில் தாங்கி உடல் மெலிந்து நீ பட்ட கஷ்டங்களுக்கு நான் என்ன கைமாறு செய்வேன். அன்றிலிருந்து இன்று வரை நீ செய்த காரியங்கள் அனைத்திற்கும் கைம்மாறு செய்ய முடியாமல் சன்னியாசியாக நின்று தவிக்கிறேனே என்று அழுது புலம்பினார்.

கடவுளே ஆனாலும் தாய்க்குப் பிள்ளை தானே. அதனால் தான் நபிகள் நாயகம்
''உன் தாயின் காலடியில் தான்
சொர்க்கம் இருக்கிறது'' என்றார்.

ஒரு நாள் சிவாஜி களைத்துப் போய் வந்தார். அவருடைய அம்மாஜீஜாபாய் அந்த நேரத்தில் சதுரங்கம் விளையாட அழைத்தார். களைப்பாக இருக்கிறது அம்மா. நான் விளையாட வரவில்லை என்றார் சிவாஜி. உடனே அம்மா ''ஆட்சியில் இருப்பவனுக்கு ஏதுடா களைப்பு? என்று சிவாஜியை சீண்டி விட்டது மட்டும் அல்லாமல் இந்த விளையாட்டில் ஜெயித்தவர்கள் கேட்கிறதை தோற்றவர்கள் கொடுக்க வேண்டும். இதுதான் விதி. இப்போது நீ தோற்றுவிட்டாய். அதனால் ஜெயித்த நான் சொன்னதை நீ செய்ய வேண்டும். கோட்டையின் மேல் தளத்திற்கு அழைத்துச்சென்ற தாய் வெகு தொலைவில் இருந்த ''சிம்மகாட்'' கோட்டையை நோக்கி அதில் பறந்து கொண்டிருந்த சுல்தானின் கொடியைக் காட்டி ''நீ என் மகன் என்பது நிதர்சனம் என்றால் நாளை மாலை சூரியன் மறையும் முன் அந்தக் கொடி இறங்க வேண்டும். உன் கொடி அதில் பறக்க வேண்டும் என்று கூறினார். திகைத்துப் போன சிவாஜி இரவோடு இரவாக உடும்புகளின் வாலில் கயிற்றைக் கட்டி காலையில் போரைத் தொடங்கி மாலையில் ஜெயித்தார். அம்மாவின் ஆசைப்படியும் அவரது ஆணைப்படியும் கொடியை சிம்மகாட் கோட்டையில் பறக்க விட்டார். சிவாஜியை ''வீர சிவாஜியாக'' மாற்றியது தன் தாயின் வார்த்தை அல்லவா.

தேவகுமாரனாக இருந்தாலும் தன் தாயின் சொல்கேட்டு தன் முதல் அற்புதத்தை ''கானாவூர்'' திருமண விழாவில் நிகழ்த்தினார் இயேசுபிரான்.

ஒவ்வொரு அவதாரம் எடுத்து இந்த மண்ணுலகை காப்பாற்றும் கண்ணபிரான் மண்ணை தின்றதாக தாய் யசோதையிடம் அடிப்பட்டார். விண்ணுலகில் சொர்க்கம் அடைய வேண்டும் எனில் மண்ணுலகில் தாயின் பெருமையைப் போற்றுவோம்.

**முடிவுரை**

**''சூரியனை பகலுக்கும்**
**சந்திரனை இரவுக்கும்**

நட்சத்திரக் கூட்டங்களாக உங்களை எங்கள் கண் முன் ஜொலிக்க வைத்து எங்கள் வாழ்வை உயர்றிய இறைவனுக்கு நன்றி. வாழ்க்கை என்பது யாரையும் சார்ந்தது இல்லை. ஏனெனில் நிழல் கூட வெளிச்சம் இருந்தால் தான் துணையாக வரும். தோல்விகளை தழுவும் போது ஏமாற்றம் என்று நினைக்காமல் மாற்றம் என்று நினையுங்கள். இதுவே வெற்றியின் ரகசியமாகும்.

*ஒருவருக்கு நம் வார்த்தையால் மன நிம்மதி கிடைத்தால் அது போதும், முடிந்தவரை வார்த்தையால் வாழ்க்கையை மட்டும் அல்ல, வானத்தையும் நம் வசமாக்குங்கள். வந்த இடமும் போகின்ற இடமும் மனித அறிவுக்கு எட்டாதவை. வார்த்தைகளால் வருணிக்க முடியாதவை.*

*வாழ்க்கையா..?*
*மரணமா.?*
*எது வேண்டும்?*

*என்று கேட்டால் வார்த்தைகளைத்தான் தேர்ந்தெடுப்பான். ஏனென்றால் வார்த்தை தான் ஞான மாளிகையின் திறவுகோல்*

***"அழகு என்பது அழகற்றவைகளின் தொகுப்பு" புத்தர்***

*என்று புது அர்த்தம் சொன்ன புத்தர் பெருமான் பிறந்து ஏழே நாட்களில் தன் தாயை இழந்தார். சித்தார்த்தனை அவனது தாயின் தங்கையாகிய கௌதமி வளர்த்தாள். சிற்றன்னையின் வேண்டுகோளுக்கு இணங்கி சிற்றன்னை உட்பட பல பெண்களை புத்த பிக்குணிகளாக அவர் ஏற்றுக் கொண்டார். உலகத்தை துறந்த துறவிகளும் தாய் சொல்லை மந்திரமாக ஏற்றுக்கொள்ளுவார்கள்.*

***"பெண்மை வாழ்க என்று கூத்திடு வோமடா!***
***பெண்மை வெல்க என்று கூத்திடு வோமடா!***
***தண்மை இன்பம் நற் புண்ணியஞ் சேர்ந்தன***
***தாயின் பெயரும் சதியென்ற நாமமும்!***
***பாரதியார்***

***வாழ்க பெண்கள்!***
***போற்றுவோம் பெண்மையை!***

**அடிக்குறிப்பு**

*பேச்சாளர், எழுத்தாளர் கவிதா ஜவஹரின்சுயாதுமாகி நின்றாய் தோழி" என்ற தொடர் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது.*